நகராட்சி அலுவலகம்,

சாத்தூர்.

நாள்: 27.01.2024

------------------

## சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு

**கூட்டம் எண்.** 22

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு** 2053**ம் வருடம் தை** 17 **ஆம் நாள்** 2024**ம் ஆண்டு ஜனவரி மாதம்** 31.01.2024**ம் தேதியன்று புதன்கிழமை காலை** 11.00 **மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**

**சாத்தூர் நகராட்சி.**

பொருள் எண்.1

சாத்தூர் நகராட்சியில் ஆணையர் அவர்களின் பொலிரோ ஜீப் TN 67 BP 1251 வாகனத்திற்கான காலமுறை பராமரிப்பு பணிகளான கீழ்க்கண்ட பணிகளை மகேந்திரா & மகேந்திரா டீலர் மதுரை கப்பலூர் (Automotive manufactures Pvt Ltd.) சர்வீஸ் செய்யவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.
2. இஞ்ஜின் ஆயில், ஆயில் பில்டர் டீசல் பில்டர் புதியது மாற்ற வேண்டும்
3. வாகனம் ஸ்டார்ட் செய்யும் போது ஏற்படும் பழுதினை சரி செய்ய வேண்டும்.
4. கியர் ஆயில், கிரவுன் ஆயில், டெப் ஆயில் செக்கப் செய்து ஆயில் ஊற்ற வேண்டும்.
5. 4 –வீல் கீரிஸ் பேக்கிங் செய்து பிரேக் செக்கப் செய்து மாட்ட வேண்டும்.
6. வீல் அலாய்மெண்ட்டு பார்க்க வேண்டும்.
7. லைட் செக்கப் A/C செக்கப் செய்து வயரிங் செக்கப் செய்து மாட்ட வேண்டும்.
8. கிலோ மீட்டர் 50000-க்கான செக்கப்கள் அனைத்தும் செய்ய வேண்டும்.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 836/2023/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.385, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் விநியோக மினி டேங்கர் லாரி TN 67 B 7759 வாகனம் வாங்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலாகிறது. மேலும் இவ்வண்டிக்கான தகுதி சான்று பிப்ரவரி 2024 உடன் முடிவு பெறுகிறது. தமிழ்நாடு மோட்டார் வாகன அரசாணையில் 275 நாள்: 10.10.1990-ல் எந்த ஒரு அரசு வாகனமும் அதிகபட்சமாக 2,50,000 கி.மீ இயக்கப்பட்டிருந்தாலோ அல்லது 10 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு இருந்தால் மேற்கண்ட வாகனத்தினை கழிவு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட வாகனம் 25 ஆண்டுகளுக்கு மேலாவதால் வாகனத்தினை புதுப்பித்து இயக்க இயலாது. மேலும் குடிநீர் பணியின் அத்தியாவசியம் கருதி புதியதாக ஒரு டேங்கர் லாரி வாங்கவும் அதற்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அ) இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கென ஒரு பெரிய டேங்கர் லாரி மற்றும் ஒரு சிறிய டேங்கர் லாரி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது 2 லாரிகளுக்கும் அதன் ஆயுட்காலம் முடிவு பெறுவதால் அதனை கழிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) திருவிழா காலங்களில் பொதுமக்களின் தேவைக்கு இதுநாள் வரை இரு லாரிகளை கொண்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது இரண்டு லாரிகளையும் கழிவு செய்வதால் அவசர காலத்திற்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு இந்நகராட்சியில் வாகனங்கள் எதுவும் இல்லை. எனவே குடிநீர் பணியின் அத்தியாவசியம் கருதி ஒரு டேங்கர் லாரி வாங்கவும் அதற்கு ஏதேனும் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தரக்கோரி உரிய கருத்துருவினை சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 567/2023/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.386, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.3

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி குடிநீர் விநியோக பராமரிப்பு, குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பம்ப் மெயின் லையன்கள் உடைப்புகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.9,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்

(ந.க.எண். 148/2023/எம்1பகுதி-3)

நகர்மன்றத் தீர்மானம் எண்.387, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.4

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி பாதாள சாக்கடைகளில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.,8,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்

(ந.க.எண். 146/2023/எம்1பகுதி-3)

நகர்மன்றத் தீர்மானம் எண்.388, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

சாத்தூர் நகராட்சியினால் புதிய பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் இணைப்புகள் வழங்குவதற்கு தயார் செய்யப்பட்ட உபவிதிகள் குறித்த அறிவிப்பினை தினசரி நாளிதழ் தமிழ் சுடரில் விளம்பரம் செய்தவைக்கு விளம்பர கட்டணம் ரூ.15,750/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2053/2006/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.389, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.6

சாத்தூர் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடைகளில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 10.01.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.முத்துராமலிங்கம் - மதிப்பீட்டை விட 0.15 சதவீதம் குறைவு
2. திரு.எம்.ஞானசேகரன் - மதிப்பீட்டை விட 0.07 சதவீதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் (மதிப்பீட்டு தொகை ரூ.8,00,000) ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பொதுசுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 146/2023/எம்1 பகுதி-3)

நகர்மன்றத் தீர்மானம் எண்.390, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி குடிநீர் விநியோகத்திற்கான குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பம்ப் மெயின் லையன்கள் உடைப்புகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 10.01.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.முத்துராமலிங்கம் - மதிப்பீட்டை விட 0.05 சதவீதம் குறைவு
2. திரு. எம்.ஞானசேகரன் - மதிப்பீட்டை விட 0.14 சதவீதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் (மதிப்பீட்டு தொகை ரூ.9,00,000) ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 148/2023/எம்1 பகுதி-3)

நகர்மன்றத் தீர்மானம் எண்.391, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.8 மற்றும் 9 குருலிங்காபுரம் தெருவில் புதியதாக குடிநீர் குழாய் பதிக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 10.10.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்பநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.D.சுந்தரமகாலிங்கம் - மதிப்பீட்டை விட 0.92 சதவீதம் குறைவு
2. திரு.எம்.ஞானசேகரன் - மதிப்பீட்டை விட 0.75 சதவீதம் அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.D.சுந்தரமகாலிங்கம் (மதிப்பீட்டு தொகை ரூ.1,30,000) ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 632/2023/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.392, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

சாத்தூர் நகராட்சியினால் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்தவைக்கு விளம்பர கட்டணம் ரூ.2,814/- வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 492/2023/எம்1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.393, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

சந்தனம் மகளிர் மன்றத்தில் உறுப்பினர் திருமதி.எஸ்.பரமேஸ்வரி சாத்தூர் நகராட்சியில் தற்காலிக பணியாளராக பணிபுரிந்து வருகிறார். அவரது மாத ஊதியம் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். A7/P.R.114/135/2023, நாள்:10.07.2023ம் தேதிய கடிதத்தில் 2023-2024ம் ஆண்டிற்கான பணியிடம் வாரியாக தினசரிபடி நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.862/2017/அ1)

நகர்மன்றத் தீர்மானம் எண்.394, நாள்:31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் அனைத்து பேருந்துகளுக்கும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் வெள்ளக்கரை சாலையில் அமைந்துள்ள கட்டண கழிப்பறைக்கும், பலமுறை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் யாரும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள முன்வராததினால் பேருந்து நிலைய கட்டண வசூல் செய்யும் உரிமத்திற்கு முன்வைப்பு தொகை ரூ.2,00,000/-ல் இருந்து ரூ.1,50,000/-ம் ஆகவும், வெள்ளக்கரை சாலையில் உள்ள கட்டணக் கழிப்பறை முன்வைப்புத் தொகை ரூ.1,00,000/-ல் இருந்து ரூ.75,000/- ஆகவும் குறைத்து வைக்கவும் மற்றும் 2024-2027ம் ஆண்டு பொது ஏலம் நடத்தவும், அதற்கான விளம்பர உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1064/2017/சி2)

நகர்மன்றத் தீர்மானம் எண்.395, நாள்: 31.01.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**